
உ

சிவமயம்

# நல்லூர்



## வெளியீடு

## உலக சைவத்திருச்சபை - இலங்கை

ஈழவூர் சைவப்புலவர்

சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (MA.JP)

**02.09.2016**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லூர்



ஈழவூர் சைவப்புலவர்

சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (MA, JP)

வெளியீடு

உலக சைவத்திருச்சபை - இலங்கை

02.09.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மகாதேவா ஆசிரமம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி.



## ஆசியுரை

அன்பேசிவம்

திருவருள்மிகு நல்லூர்க் கந்தசாமி கோயில் துர்முகி வருட மஹோற்சவப் பெருவிழா சிறப்புற நிகழுங் காலத்தில் உலக சைவத்திருச்சபை - இலங்கை முன்னெடுத்த "தெய்வீக சொற்பொழிவு" கந்தன் கருணை கைகூடிய காரணத்திலேதான் அமைந்தது. SOND நிறுவனம் - யாழ்ப்பாணம் ஒலி அமைப்பு ஏற்பாடு செய்து கொடுத்தது. "ஒன்று சேர்ந்தால் உண்டுவாழ்வு" என்ற மகாவாக்கியத்தை உறுதி செய்துள்ளது. செந்தூர்ராசா அவர்கள், அந்நிறுவனப் பணியாளர்கள் மனமுவந்து இணைந்தமை பாராட்டாது விடமுடியாது. முத்துவிநாயகர் ஆலய குருமணி குகதாஸ சர்மா ஐயா அவர்களின் பன்முகசிந்தனையும், அறக்கருணையின் வெளிப்பாடும். ஆலய மண்டபத்தினைக் கேட்டபோது மனம் கோணாது அனுமதிதந்தமை விநாயகர் திருவருளேயாகும். இப்பணிகள் சிறக்கவும், அறிவுசார் சொற்பொழிவாளர்கள் அனைவருக்கும் கந்தன் கருணை கிடைக்க வேண்டும் என அருளாசி கூறுகின்றேன். இவர்கள் வெளியீடு செய்யும் "நல்லூர்" என்ற தெய்வீக நூல் மலர எல்லாம் வல்ல கந்தப் பெருமானே காரணமாவார். தெய்வீகப் பணிகள் சமய, சமூகப் பணிகள், மக்களிடம் சென்றடைவது அறிந்து பெருமகிழ்வுடன் அருளாசி கூறுகின்றேன்.

**வணக்கத்திற்குரிய**
**தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்**
**பீடாதிபதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உ.
சிவமயம்
குருபாதம்






**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.


....../....../20......

# ஆசியுரை

## ஓம் நமசிவாய சிவாயநம ஓம்

ஆன்மாக்கள் நன்னெறிப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆன்மாக்கள் நன்னெறிப்படுத்துவதற்கு சமய, சமூக நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டிய காலமாக சமகாலம் அமைந்துள்ளது. சைவத்தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசாமி கோயில் மஹோற்சவப் பெருவிழாவில் பெருமளவில் கந்தன் கழலடிகாண ஒன்று சேர்வார்கள். நல்லூர் முத்து விநாயகர் ஆலயத்தில் 2016ம் ஆண்டு துர்முகி வருட மஹோற்சவப் பெருவிழாவில் தெய்வீக சொற்பொழிவை உலக சைவத்திருச்சபை - இலங்கை ஏற்பாடு செய்தமை பாராட்டப்பட வேண்டும். அத்துடன் நித்திய வழிபாட்டுக்குரிய ***"நல்லூர்"*** என்னும் அருள் நூல் வெளியீடு செய்வது அறிந்து பெருமகிழ்வடைந்து ஆசிகூறுகின்றேன். இச்செயற்பாட்டை முன்னெடுத்து வரும் சைவப்புலவர் சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா அவர்களின் முயற்சியைப் பாராட்ட வேண்டியதும் கடப்பாடாகும். இறைபணி தொடர நல்லாசி கூறி அமைகின்றேன்.

அன்பே சிவம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 25 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# ஆசியுரை

உலக சைவத்திருச்சபை - இலங்கை என்ற புனிதமான அமைப்பின் பணிகள் புதிய சிந்தனையுடன், புதிய வடிவில் திருவருள் துணையுடன் வடிவமைக்கப்படுகின்றது. பாதயாத்திரைகள், தலயாத்திரைகள், பாடசாலைகளில், ஆலயங்களில் சமய தீட்சை வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

துர்முகி வருடம் நல்லூர்க் கந்தசாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாகத் தெய்வீகச் சொற்பொழிவு நிறைவை நல்லையம்பதி முத்து விநாயகர் ஆலயத்தில் ஏற்பாடு செய்து சிறப்பாக நிறைவாகி வருகின்றது. இச்சிறப்பினை வரலாற்று ஆவணமாக நல்லூர் என்னும் நூல் வெளிவருவது அறிந்து பெருமகிழ்வு அடைகின்றேன். இந்நூலானது நித்திய வழிபாட்டுக்கு உரியவையாக அமைந்திருக்கின்றமையும் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

இவ்வகைச் சிறப்புக்கள் யாவும் நல்லைக் கந்தன் திருவருளேயாகும். உலக சைவத்திருச்சபை - இலங்கை அமைப்பின் பணிகள் தொடர வேண்டுமென நல்லைக் கந்தன் பாதம் பணிந்து இறைஞ்சுவதுடன் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தா அவர்களையும் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

இறைபணியில்
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ஜா**
**வதிவிட ஆச்சார்யார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அருள்மிகு நல்லூர்க் கந்தசாமி கோயில் துர்முகி வருட மஹோற்சவப் பெருவிழா கந்தன் கருணை கொண்டு சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன். முதன் முதலாக உலக சைவத்திருச்சபை - இலங்கை ஏற்பாடு செய்த தெய்வீக சொற்பொழிவுகள் சிறப்பாக அமைய ஒத்துழைத்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்கள் பணி அர்ப்பணிப்பான, தெய்வீகமான, ஆன்மார்த்தமான பெரும்பணியாகும். இவர்களின் ஆன்மீகப் பயணம் நான்கு மார்க்கங்கள் ஊடாகவும் படிமுறையாக உயர்ந்து வருகின்றது. சமயக் கருத்துக்களை பலர் எம்முடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியும் பாராட்டியுமுள்ளார்கள். அகில இலங்கையிலும் இப்பணியை முன்னெடுக்கும் போது அனைவரும் மனம் கோணாது பங்கெடுக்க முன்வர வேண்டும். இன்று வெளியீடு செய்யும் "நல்லூர்" என்ற அருள்நூல் வரலாற்று ஆவணமாக உங்கள் கரங்களில் நல்லூர்க் கந்தன் தருகின்றான் என்பதனை உணர வேண்டும். இம்முயற்சிகளில் அனைவரும் கருவிகளே, உட்பொருள் "கந்தன் கருணையே" என்பதுணர வேண்டும். "கோபம் அழிவைக் கொடுக்கும்" பாபத்தைத் தேடும் பணிவு உயர்வைக் கொடுக்கும். விட்டுக்கொடுப்பு உண்மையை உணர வைக்கும் என்பதுண்மை. இவற்றுக்கு மனிதன் மதிப்பழித்து வாழ வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குகின்றேன்.

**ஸ்ரீஸ்கந்தராசா சுரேஸ்**
**சுரேஸ் மோட்டோர்ஸ்.**
**நுணாவில் கிழக்கு.**
**சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

இறைவன் எங்கும் சர்வவியாபகமாக மலர்ந்துள்ளான். சைவத்தமிழ் மக்களின் பண்பாடு வளரும் இடம் ஆலயமாகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதற்கு அமையவே இன்று கோயில்களும் குடிகளும் பின்னிப்பிணைந்து அமைந்துள்ளன. நல்லூர்க் கந்தசாமி கோயில் அமைவிடம் இதற்கோர் முன்னுதாரணமாக அமைகின்றது. இவ்வாலய மஹோற்சவப் பெருவிழா என்றால் அடியார்களால் ஆலய வளாகம் நிறைந்துவிடும். இங்கு நாலாபுறங்களிலும் சொற்பொழிவுகள், இசை நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள், கதாப்பிரசங்கம் என நாள்தோறும் அரங்கேறிய வண்ணமாக அமைவது வரலாற்றுண்மை. அந்தவகையில் உலக சைவத்திருச்சபை - இலங்கை இவ்வாண்டு முதன்முறையாக நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் தெய்வீக சொற்பொழிவை ஆரம்பித்தமையும், இவ்வமைப்பின் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவிய அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்பணி தொடர வேண்டுமென நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**கலாநிதி அடியார் விபுலானந்தா**
**சைவத்துறைத் தலைவர்.**
**உலக சைவத்திருச்சபை.**
**தர்மகர்த்தா. கனடா பெரிய சிவன் ஆலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முன்னுரை

திருச்சிற்றம்பலம்

என்செய லாவதி யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேஎன்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே.

திருச்சிற்றம்பலம்

உலக சைவத்திருச்சபை - இலங்கை, சைவசமயத்தில் 63 நாயன்மார்கள் 9 தொகை அடியார்கள், சந்தான குரவர்கள், (அகம் + புறம்) பிற்காலத்து தோத்திரப் பாடல்களை அருளிச் செய்த ஞானியார்கள், சித்தர்கள் என்போரின் பக்குவ நிலைகளை உணர்ந்தும், 12 திருமுறைகள், அவற்றினை அருளியவர்கள், புராணம், இதிகாசம், சைவசித்தாந்த சாத்திரங்கள் அருளியவர்களின் உண்மை நிலைகளை உணர்ந்து சிந்திக்கின்ற போது எல்லாவற்றிற்கும் மூலம் முதல் நூல்களாகிய வேதம், ஆகமங்களேயாகும். எனவே ஆலயங்களில் வேதம், ஆகமங்களை முன்வைத்துச் செய்யப்படுகின்ற உற்சவங்கள் எவையாக இருப்பினும் அவை மக்களிடம் இயன்றளவு சென்றடைய வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கோடு தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் தெய்வீக சொற்பொழிவு நிகழ்வை நல்லூரான் திருவருளுடன் ஆரம்பித்திருக்கின்றது. இப்பணியின் மகத்துவம் "இறையருள் ஒன்றேதான் மனிதனை இயங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதும் வழிகாட்டுவதுமாகும்" என்ற உண்மையை வெளிப்பட உணரவைத்திருக்கின்றது. இவை மக்களிடம் சென்றடைய வேண்டும் என்பதற்கு ஆதாரமாக நூல் வெளியீடு செய்யும் சிந்தனையைத் தந்த இறைவனின் பாதாரவிந்தத்தை வணங்கி இறைஞ்சுகின்றேன்.

இந்நூல் மனிதர்கள் தெய்வீக நிலைக்கு உயர்வடைய வழிகாட்டியாக அமைய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்கின்றேன். இது எமது நான்காவது வெளியீடாக வெளிவருகின்றது. அனைத்து இல்லங்களிலும் இருக்க வேண்டிய மாபெரும் சொத்து இந்நூலாகும். முத்து விநாயகர் அனைவரின் தடைகளை அகற்றி நல்ல சிந்தனையைக் கொடுக்க நல்லைக் கந்தன் அருள்புரிவார் என்ற நம்பிக்கையுடன் இத்தெய்வீக நூலை நல்லூர்க் கந்தன் திருப்பாதக் கமலங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம். சொற்பொழிவாற்றிய அனைவருக்கும் சைவநெறிச் சன்மார்க்கர் என்னும் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கின்றோம்.

***"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"***

***வாழ்க வளமுடன்***

**ஈழவூர் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்,**
**சைவ சிவாச்சாரியார், இந்து தர்மாசிரியர்**
**சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா (MA, JP)**
**அமைப்பாளர், திருச்சபை நாயகர்**
**உலக சைவத் திருச்சபை - இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அனுசரணை வழங்கியோர்



தேசமானிய
லயன். எஸ். ஜெயசங்கர் (J.P)
அகில இலங்கைச் சமாதான நீதவான்

கௌரவத் தலைவர்
பொது முகாமைத்துவ உதவியாளர்,
வேலைச்சங்கம்,
அழகுத்தமிழ் எழுத்தாளர்

குருக்கள் குடியிருப்பு
வரணி.



திருவருள்சேர். விஜயரத்தினம் கௌரிஹராசன்
முகாமையாளர்,
சொப்லொஜிக் காட்சியறை,
A - 9 வீதி, சாவகச்சேரி.

அன்புள்ளம் கொண்ட அனுசரணையாளர்கள் இருவரும் இத்தெய்வீகப்பணிக்குபேருதவி புரிந்துள்ளனர். இவர்கள் சமய, சமூக பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள். இப்பணிகள் மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல நல்லையம்பதி முத்து விநாயகப் பெருமான் துணைநிற்க நல்லைக் கந்தன் திருவருள் புரிய வேண்டுமென கந்தன் கழலடியை இறைஞ்சி பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா** (MA, JP)
**அமைப்பாளர், திருச்சபை நாயகர்,**
**உலகசைவத்திருச்சபை - இலங்கை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் நவசிவாயா

# சைவசமய பிரசாரகர் உள்ளத்தில் இருந்து...

"சைவத்தின் மேற்சமயம் வேறிலை அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேற்தெய்வம் வேறில்லை" எனும் கோட்பாட்டிற்கமைய சிவப்பரம்பொருள் என்றுமுள்ளவர். சிவமே உலகத்தைத் தோற்றுவித்து இயக்கி வருகின்றான். அவனன்றி ஓர் அணுவும் அசைய முடியாது என்பதற்கேற்ப எல்லா இடங்களிலும் எல்லாப் பொருட்களிலும் வெந்நீரில் இருப்பது போல பரந்து, செறிந்து வியாபித்துக் கொண்டிருக்கிறான். இத்தகைய சிவனை வழிபடும் சமயமே சைவசமயம் ஆகும். ஒருகாலத்தில் உலகமெல்லாம் சைவசமயம் பரந்து காணப்பட்டது. இந்நிலை மீண்டும் உருவாகி வருகின்றது. "தென்னாடுடைய சிவனே போற்றி என்நாட்டவருக்கும் இறைவா போற்றி" என்பதற்கும் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதற்கேற்பவும் இலங்கை இந்தியாவில் வாழ்ந்த அருளாளர்கள் உலகியல் ரீதியாக சைவசமயத்தை வளர்த்தெடுத்தார்கள்.

சங்கத் தமிழ் இலக்கியமான திருமுருகாற்றுப் படையோ "உலகம் உவப்ப வானேர்புதிலிதரு..." எனவும் "உதித்தனன் உலகம் உய்ய" என கந்தபுராணமும் கூறும் சிந்தையில் முருகன் போற்றப்பட்டாலும் முருகனும் சிவமும் சக்தியும் இணைந்த வடிவமேயாகும். ஐந்து முகம் தோன்றில் ஆறு முகம் தோன்றும் என்பதற்கமைய சிவனது ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் எனும் ஐந்து முகங்களுடன் சக்தியின் அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தையும் இணைத்ததுதான் ஆறுமுகசுவாமியாகும். இவ்வாறு வைரவர், வீரபத்திரர், பெரியதம்பிரான் எல்லோரும் சிவரூபமானவர்களே.

சிவவழிபாட்டையும் சைவசமய கலாசாரங்களையும் உலகளாவிய ரீதியில் பரப்பிக் கொள்வது இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சைவர்களின் கடமையாகும். அற்ப சலுகைக்காக அன்னியமதம் புகுதல் ஏற்கத்தக்கதல்ல. ஒருவன் சைவசமயத்தில் பிறந்திருக்கின்றான் என்றால் பலபிறவிகளின் புண்ணியம் மெய்ச்சமயமாகிய சைவத்தில் சிவபெருமான் எம்மைப் பிறக்கச் செய்திருக்கின்றார். "சைவமாம் சமயம் சாயின் ஊழ் பெறலரிது"என்ற வாசகத்திற்கேற்ப சிவனைத் தினமும் வழிபடுவோம். சைவசமய தீட்சை பெறுவோம். திருநீறணிவோம், சிவனடியாரை மதிப்போம் என்ற கோட்பாட்டில் இன்று உலகளாவிய ரீதியில் உலக சைவத்திருச்சபை தொழிற்பட்டு வருகின்றது.

உலக சைவத்திருச்சபையின் இலங்கைக்கான அமைப்பாளர் சைவப்புலவர் சிவஸ்ரீ.கு. சுமுகலிங்கம் ஐயா தொழிற்பட்டு வருகின்றார். சைவசமய பிரசாரங்களாக பல சைவப்புலவர்கள் தொழிற்பட்டு வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவபூமியாம் இலங்கையில் வடக்கே மாவிட்டபுரம் தொடக்கம் தெற்கே கதிர்காமம் வரை மேற்கே கொழும்பு முதல் கிழக்கே மட்டக்களப்பு வரை உள்ள சைவாலயங்கள் தோறும் சென்று சைவசமய பிரசாரங்கள், மாணவர்களுக்கான சைவசமயப் போட்டிகள் நடாத்துதல், சைவப் பணிசெய்வோர்களைப் விருது வழங்கி, மேன்மைப்படுத்தல், சைவசமய தீட்சை வழங்கல் எனப்பல பணிகளை நடாத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசித்திபெற்ற ஆலயங்கள் தோறும் தலயாத்திரை, பாதயாத்திரை செய்து வழிபடல் என்ற குறிக்கோளிலும் அவ் ஆலயங்களின் சிறப்பை மக்களுக்கு வெளிப்படுத்தல் எனும் வகையில் திருக்கேதீஸ்வரம் நோக்கி நல்லூரிலிருந்து வருடாவருடம் பாதயாத்திரை மேற்கொண்டு வருகின்றனர். முன்னேஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற தலங்களுக்கும் பாதயாத்திரை மேற்கொள்ளுகின்றனர்.

மேலும் திருநீறு தயாரித்தல், திருநீற்றை வழங்கல், உருத்திராட்சம் வழங்கல், சிதைவடைந்த சிவாலயங்களைப் புனருத்தாரணம் செய்தல் எனப் பலதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டு தொழிற்பட்டு வருகின்றது. இவ்வகையில் சைவசமய உலக சைவத்திருச்சபை - இலங்கை சைவப்பிரசாரகர் என்ற வகையில் இச்செய்தியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**சைவசித்தாந்த கலாநிதி, சைவச் சொற்பொழிவாளர்,**
**சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன்**
**சைவப் பிரசாரகர்,**
**உலக சைவத்திருச்சபை,**
**இலங்கை.**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நன்றிகள் கலந்த நல்லாசியுரை

உலக சைவத்திருச்சபை - இலங்கை முதன்முறையாகத் தெய்வீக சொற்பொழிவை நிகழ்த்த வேண்டும் என எண்ணியபோது நல்லைக் கந்தன் விரும்பினான், ஏற்றான் அதற்கு திருவருளும் தந்தான். சிவனடியார் ஒருவர் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முன்வந்து நெறிப்படுத்தினார். அவர்பணி தொடர நல்லைக் கந்தன் நல்லருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து நல்லாசிகளைத் தெரிவித்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பணிக்கு முக்கிய தேவையான பொருள் ஒலி அமைப்பேயாகும். SOND நிறுவனம் - யாழ்ப்பாணம் செந்தூர்ராசா அவர்களிடம் கேட்டபோது எந்தத் தடையும் சொல்லாது மனமுவந்து தந்து உதவியுள்ளார். முத்து விநாயகர் ஆலயத்தைக் கேட்டபோது பெருமனதுடன் பிரம்மஸ்ரீ குகதாஸ சர்மா ஐயா பூரண சம்மதம் தெரிவித்தார். சொற்பொழிவாளர்களை நெறிப்படுத்திய போது எல்லோரும் பெருமனத்துடன் பூரண சம்மதம் தெரிவித்தனர். சாரணர் சங்கம் - யாழ்மாவட்ட ஆணையாளர் தேவறஞ்சனிடம் அணுகியபோது ஐந்து சாரணர்களை எமது ஒலி அமைப்பு ஒழுங்குபடுத்தல் பணிக்கு ஏற்பாடு செய்து தந்தார்.

நோட்டிஸ் விளம்பரம் செய்ய, பனர் அடிக்க வேண்டும் என எண்ணியபோது சுரேஸ் மோட்டோர்ஸ், சாவகச்சேரி உரிமையாளர் அவர்கள், நியூ குளோபல் ஸ்ரார் உரிமையாளர் அவர்களும் பூரண சம்மதம் தெரிவித்தனர். நூலை வெளியிட எண்ணிய போது வி.கௌரிஹராசன், சொப்லொஜிக் காட்சியறை முகாமையாளர் சாவகச்சேரி, லயன் சு. ஜெயசங்கர் முகாமைத்துவ உதவியாளர் ஆகிய இருவரும் முன்வந்தனர். இச்சிவப்பணிக்கு உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் நல்லைக் கந்தன் திருவருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து நன்றி கலந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குணசிங்கம் கமலாதேவி**

**தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம், சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

02. குருதோத்திரமாலை எங்கள் குருநாதன்

03. நடராஜப்பத்து

04. அம்மன் துதி

05. திருக்கடவூர் அபிராமியம்மைப் பதிகம்

06. நல்லூரான் திருவடி

07. பழநி சுப்பிரமணியக் கடவுள் பேரில்

08. தரிசனைப்பத்து

09. கழுகுமலைப்பத்து

10. கதிரேசப்பத்து

11. திருமுறைகளில் வீரபத்திரர்

12. ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம்

13. கொடிக்கவி

14. ஆலய மஹோற்சவ காலத் திருமுறை

15. மஹோற்சவத்தின் போது தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைகள்

16. நவ சந்நிகளில் ஓதவேண்டிய

17. தேவாரப் பண்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சொற்பொழிவாளர்கள்



திருமதி. M. அனந்தலட்சுமி
இந்து சமய கலாசார அபிவிருத்தி
உத்தியோகத்தர்
யாழ்மாவட்டம்.



கவிமணி அன்னைதாசன்
ஓய்வுநிலை ஆசிரியர்



சி.கா.கமலநாதன் (J.P)
B.A (Hons), History, M.A (Jaffna), PGDE, MED (Hons)
வரணியூர் சைவப்புலவர், சைவசித்தாந்த
பண்டிதர்
விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசிய கல்வியியற்
கல்லூரி, பத்தனை.



கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்
B.A(Hons), (இந்.நா), PGDE, M.A(சைவ. சித்)
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,
ஆசிரிய மத்திய நிலையம், வரணி,
தென்மராட்சிக் கல்வி வலயம்.



செல்லையா பாலச்சந்திரன்
ஓய்வுநிலை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சொற்பொழிவாளர்கள்



SKN. தவராஜா (M.A)
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,
யாழ்ப்பாணம்.



சைவசித்தாந்த கலாநிதி, சைவச்
சொற்பொழிவாளர்,
சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் (M.A, J.P)
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,



இளம் சைவப்புலவர்
திரு. சண்முகநாதன் நவநீதன்
B.F.A (Art), M.A (met, Saivasiddandam), PGDE
தெய்வத் தமிழ்செம்மல், தமிழ்ச்சொல் அருவி,
தெய்வத் தமிழ்ச் சுடர்
ஆசிரியர், கிளி/ பரந்தன் இந்து ம.வி



சைவப்புலவர் சண்முகலிங்கம் முகுந்தன்
Dip in Tech, B.A, M.A
ஆசிரியர் யா/ யூனியன் கல்லூரி



செஞ்சொற்சுடர் செந்தமிழ் இலக்கியவாரி
நித்தியானந்தன் பாபுதரன்
ஆசிரியர், யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சொற்பொழிவாளர்கள்



பொன்னுத்துரை சந்திரவேல் M.A
(Saivasiththantha)
சைவப்புலவர்,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்



பொன். சுகந்தன்
தமிழ்ப் பண்டிதர், சைவப்புலவர்,
முதுகலைமாணி (தமிழ்)
தமிழ்ஞான வித்தகர், சொல்லின் சிகரம்,
கவிமாமணி



சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
நித்தியானந்தன் தசீதரன் M.A
சைவசித்தாந்த முதுகலைமாணி, (யாழ்பல்கலை)
இந்துதர்மாசிரியர்



அருள்பரன் உமாகரன்
தமிழருவி (இணுவில் அறநெறிச் சமூகம்)
கவிஇளவேந்தன் (URFF - NGO)



திரு. இராசா மகேஸ்வரராஜ்
ஆசிரியர்,
யா/ இராமநாதன் மகளிர் கல்லூரி



முத்துலிங்கம் நித்தியானந்தா
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சொற்பொழிவாளர்கள்



சைவப்புலவர்
திரு. செல்லையா பரமேஸ்வரன்
அதிபர்
யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்



சேக்கிழார் வாரிதி, இளஞ்சைவப் புலவர்
கந்தசாமி கைலநாதன்
ஆசிரியர், யா/ அராலி சரஸ்வதி ம.வி)



தம்பிஐயா மனோஜ்குமார்
இந்து தர்மாசிரியர்



விஷ்வகுமார் விஷ்ணுஜன்



தம்பிஐயா மதுஜனன்
யாழ் பல்கலைக்கழகம்
2ம் வருட மாணவன்

திரு. வே. சிவராஜா
சமூகசேவை உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

ஆனைக் கன்றே ஐங்கர ஐங்கர முடையாய்
ஞானப் பொருளே நவமா மணியே
அரனார் மகனே அரிதிரு மருகா
பரஈஸ் வரிதன் பாலா உனது
சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதக் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பாய்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசெந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகளொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்து அருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்து
திருத்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென்உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந்தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தெ
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
போறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங்காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாடிபின் நாவில் உணர்த்தி
குண்டலி யதனில் கூடிய அசைபை
விண்டெழுமந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலை
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அதேநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிவையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங்காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்கு
தேரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயல் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவிதிது எனக்கருள் செய்து
முள்ளை வினையின் மாலைக் களைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தைதெளிவித்
திருள் வெளி இரண்டுக்கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தின்உள்ள சதாசிவம் காட்டு
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் காப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாய விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்

## கணபதி

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

மூசிக வாகன கணபதி ஓம்
மூஷிக வாகன கணபதி ஓம்
மகேஸ்வர புத்திரா கணபதி ஓம்
வல்லப மோகன கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

விக்கன விநாயக கணபதி ஓம்
வேழமுகனே கணபதி ஓம்
ஈஸ்வரபுத்திரா கணபதி ஓம்
சங்கரன் மகனே கணபதி ஓம்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

பார்வதி புத்திரா கணபதி ஓம்
பரம சிவஞான கணபதி ஓம்
விக்கினம் தீர்ப்பாய் கணபதி ஓம்
என்வினை களைவாய் கணபதி ஓம்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நிர்மல நாயக கணபதி ஓம்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதோத்திரமாலை

## எங்களீ குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானா னெங்கள்குரு நாதன்
ஆவனியெல்லா மாளவைத்தா னெங்கள்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன் 01

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன் 02

வாசியோந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குல்பக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன் 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவழியை அடையென்றறா னெங்கள்குரு நாதன்
ஏல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவருமறியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 04

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன் 05

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்
வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன் 06

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசோன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன் 08

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்ற னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன் 09

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம்வில்னையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர விர்ரையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியேன்றா னெங்கள்குரு நாதன் 10

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் - ஸ்ரீ குருஞானசம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜப்பத்து

திருச்சிற்றம்பலம்

மண்ணாதி பூதமொடு விண்ணாதி யண்டம்நீ
மறைநான்கி னடிமுடியுநீ

மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ யனலும்நீ
மண்டலமி ரண்டேழும்நீ

பெண்ணும்நீ யாணும் பல்லுயிர்க்குயிரும்நீ
பிறவும்நீ யொருவனீயே

பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பேற்றதாய் தந்தைநீயே

நண்ணுநற் பொருளும்நீ யிருளும்நீ யொளியும்நீ
நாதனாய் வந்தவனும்நீ

நவில்கின்ற கிரகங்க ளொன்பதும்நீ யிந்த
நானிலந் தந்தவனுநீ

எண்ணரிய சீவகோடிக ளீன்ற வப்பனே
என்குறைக ளார்க்குரைப்பேன்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 01

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கைசிவ காமியாட

மாலாட நூலாட மறையாடத் திரையாட
வசனமுறை பிரமனாடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்

குண்டல மிரண்டாடத் தண்டைபுலி யுடையாடக்
குழந்தைமுரு கேசனாடத்

தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
தனியட்ட பாலராடத்

தகுதும்மைப யறுகாட நந்திவா கனமாடத்
தாளநெறி மாதராட

யானாட வினையோட வெனைநாடி யிதுவேளை
யிசைவிருதொ டாடிவருவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 02

கடலென்ற புவிமீதி லலையென்ற யுருக்கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பிக்

காற்றென்ற மூவாசை யாற்றொணாச் சுழலிரே
கட்டுண்டு நித்தநித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற விரைதேடி
யோயாம லிரவுபகலும்

உண்டுண் டுறங்குவதைக் கண்டதே யல்லாம
லொருபய னடைந்திலேனைத்

தடமென்று சேயென்று நீயென்று நானென்று
தாபரம் பின்னலிட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்

இடைநின்று தடைசெய்ய வேனென்று கேளா
திருப்பதுவு மழகாகுமோ

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 03

வம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பகர்வசிய தம்பனமலப்

பாதாள வஞ்சனம் ாரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல

அம்புகுண்டுகன்விலக மொழியு மந்திரமல்ல
வாகாய குளிகையல

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்

கோரக்கர் தனவந்தரிபோ கமுனி யிவரெலாங்
கூறும் வைத்தியமல்ல

எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கு
மிச்சையை யெனக்கருளுவாய்

ஈசனே சிவகாமி நெசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 04

நொந்துவந் தேனென்றுப லதர முரைக்கவும்
நுழையாத தென்னமதியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்று மதை
நோக்காத தந்தையுண்டோ

சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடிக்கவு
தளராத நெஞ்சமுண்டோ

தந்திமுக னறுமுகவ னிருபிள்ளை யில்லையோ
சந்ததியி யிலாதநீயோ

விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்குதே
வினையொன்று மறிகிலேன்

வேதமுஞ் சாஸ்திரமு முன்னையே புகழுதே
வேடிக்கையி துவல்லவோ

இந்தவுல கீரேழு மேளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 05

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சையில்லாத போதும்

வாலாய மாய்கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதும்

மொழியெதுகை மொனையில் லாமலே பாடினும்
மூர்க்கனேன் மூடனேனும்

மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழியெனக்கல்லவே தாய்தந்தை யர்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ

பாரறிய மனைகொளப் பாதியுட லீந்தநீ
பாலனை காக்கொணாதோ

எழில் பெருகு மண்டலங்ளிசைவா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்லரிதோ

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 06

அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழுவெனோ
வறிவற்றதற் கழுவெனோ

அல்லாமல் நான்முகன் றன்னைநொந் தழுவெனோ
வாசைமூன்றுக் கழுவெனோ

முற்பிறப்பபென்னவினை செய்தனென் றழுவெனோ
மூடருறவுக் கழுவெனோ

முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவெனோ
முத்தியைநினைந் தழுவெனோ

தனைநொந் தழுவெனோ வுன்னைநொந்தழுவெனோ
தரித்திர திசைக்கழுவெனோ

தாரணியி லுன்றனருள் பெற்றபெரி யோர்களைத்
தழுவாததற் கழுவெனோ

இன்னுமெய் பிறவிவருமென் றழுவெனோவவைக
ளெல்லா முரைக்கவருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 07

காயாமரங்க ளிற்பூபிஞ் சறுத் தேனோ
கன்னியர்கள் பழிகொண்டெனோ

கடனென்று பொருள்பறித் தேவயிறெரித்தெனோ
கடுவழியில் முள்ளியிட்டனோ

தாயா ருடற்குள் வரவென்னவினை செய்தெனோ
தந்தபொரு ளிலையென்றுநான்

தானென்ற கோபமொடு கொலைகளவு செய்தெனோ
தபசிகளை யேசினேனோ

வாயாரநின்று பலபொய் சொன்னெனோ வித்து
வாமீசரைவசை சொன்னெனோ

வந்தவரை மரியாதை செய்யா தடித்தனோ
வழக்கிலோரஞ் சொன்னெனோ

ஈயாதலோபி யேயான லுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 08

தாயாரிருந் தென்ன தந்தைளு மிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி

தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேயர்களிருந் தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீடர்க ளிருந்துமென்ன

சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்

ஓயாது மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான்றடுக்க

வுதவுமோ விவையெலாஞ் சந்தையுற வென்றுநா
னுன்னிருபாதம் பிடித்தேன்

ஈயா திருக்கத் தியாகராஜப் பெயரு
மிசையுமோ வேன்புனைத்தாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 09

இன்னமுஞ் சொல்லவோ வுன்மனங் கல்லோ
விரும்போ பெரும்பாறையோ

இருசெவியு மந்தமோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ

என்னன்னை மோகமோ யாரிட்ட சாபமோ
ஈதுனக் கழகுதானோ

இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
இனியுமுன்றனை விடுவெனோ

உன்னைவிட் டெங்குசென் றாலுமுய் திடுவெனோ
உனையடுத்துங் கெடுவெனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாவி தென்குற்ற முன்குற்ற மொன்றுமிலை
உற்றுப்பார் பெற்றவையா

என்னையாள் பவனுமஇநீ வடிமைநா னாதலா
லினியரு ளளிக்கநினைவாய்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 10

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருசந்திரன் சூரியனிவரை

சற்றெனக் குள்ளாக்கி ராசிபன் னிரெண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே

பனியொத்த நட்சத்தி ரங்களிரு பத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னால்

பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டிஎன்முன்

கனிபோல வேபேசி கெடுநினை நினைக்கின்ற
கடர்களை யுங்கசக்தி

கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி

இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதனி யுன்கடன்காண்

ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் துதி

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

1. பொண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையின ரறைகழல்
- சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர்பாடுவ ரகந்தொறு மிடு பிச்சைக்
குண்ணலாவதோ ரிச்சையினுழல்பவ ருயர் தருமாதோட்டத்
தண்ணனண்ணுகே தீச்சரமடைபவர்க் கருவினையடையாவே

2. தையலோர் கூறுடையான் தண்மதிசேர் செஞ்சடையான் மையுலா
மணி மிடற்றான் மறை விளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவேல் ஏந்தி நிவந்தொளிர் சேர்
கையுடையான் மேவியுறை கோயில் கைச்சினமே

3. ஊன் ஆனாய் உயிர் ஆனாய் உயிரில் உறும் உணர்வானாய்
வான்ஆதி ஐம்பூத வகை எல்லாம் நீ ஆனாய்
தேன் ஆரும் மலர்க் கொன்றைச் சிவம் என்னும் பொருள்
- ஆனாய்
நான் ஆனாய் உயிர்க்கு உயிரே ஞானப்பேரொளியுமையே

4. மாதவத்தால் காசிதனில் மாண்டவர்கள் தம் செவியில்
தீதகல விஸ்வேசன் செப்புவான் ஐந்தெழுத்தை
மாதவள் விசாலாட்சி மடிக்கிடத்தி வீசுவதால்
வேதனை யெலாம் தீர்ந்து வென்றிடுவார் பின்பிறப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணம்

1. பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீக்கிச்
சிரந்தழுவு சைவநெறி திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோனமுது செயத்திருமுலைப்பால்
சுரந்து அழித்த சிவகாமசுந்தரிப்பூங் கழல் போற்றி

2. பூவெல்லாம் படைத்த பூதநாயகியே புகலடை புண்ணியர் தமக்கும்
காவலாய் நிற்கும் கருனை நாயகியே சிவந்தரு சத்தி நாயகியே
தேவர் கொண்டாடுஞ் சித்நாயகியே சிவன்தருசத்தி நாயகியே
ஆவலாய் உன்னைக் கூவினேன் பணிந்தேன் அடியேனுக்கருள்
- புரிவாயே

3. கரும்பு முரல் கடிமலர் பூங்குழல் போற்றி உத்தரியத்
- தொடித்தோள் போற்றி
கரும் புருவச் சிலை போற்றி கவுணியற்குப் பால் சுரந்த
- கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னையெடுத்தாண்ட அங்கயற்கணெம்
- பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி ஆரணநூபுரம் சிலம்பு மடிகள் போற்றி

தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!
(கடவுள் உண்டு என்று நம்புங்கள். கடவுளை உணர்ந்த
பெரியோர்களை விரும்புங்கள்) இவ்வுலகத்தில்
நம்முடைய இளமையும் செல்வமும், யாக்கையும் ஒரு
சிறிதும் நிலையுடையன அல்ல. நமக்கு நேரவேண்டிய
துன்பங்கள் நேராமல், எவ்வாற்றானும் இடைநெறியில்
நீங்கி ஒழியா. ஆதலால் காலம் உள்ளபோதே
அவ்வுலகத்திற்கு உற்ற துணையாகிய அறங்களைச்
செய்யுங்கள். - சிலப்பதிகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கடவூர் அபிராமியம்மைப் பதிகம்

## அபிராமி பட்டர் அருளியது

நூல்

திருச்சிற்றம்பலம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 01

சலதியுல கத்திற் சராசரங் களை யீன்ற
தாயாகினால் எனக்குத்
தாயல்லவோ? யான் உன் மைந்தனன்றோ? எனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலை சுரந்தொழுகு பாலூட்டி என் முகத்தை உன்
முன்தானையால் துடைத்து
மொழிகின்ற மழலைக்குகந்து கொண்டிளநிலா
முறுவல் இன்புற்றருகில் யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலவி விளையாடல் கொண்டருள் மழை பொழிந்து அங்கை
கொட்டிவா என்றழைத்துக்
குஞ்சரமுகன் கந்தனுக் கிளையன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலிலே தோன்றும் ஆறாத அமுதமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 02

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்!
கண்போதினால் உன் முகப்போது தன்னையான்
கண்டு தரிசனை புரிகிலேன்!
முப்போதில் ஒரு போதும் என்மனப் போதிலே
முன்னி உன் ஆலயத்தின்
முன்போதுவார் தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய் உழன்றேன்
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வருமப்போது தமியனேன்
மனங் கலங்கித் தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 03

ஞானந் தழைத்துன் சொரூபத்தை அறிகின்ற
நுல்லோர் இடத்தினிற் போய்
நடுவினிலிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும் உபதேச முட்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈனந் தனைத் தள்ளி எனது நானெனுமானம்
இல்லா மலேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து நெஞ்(சு)
இருளற விளக்கேற்றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னையென்
ஆகத்தாமரைப்போதிலே
வைத்துவே றேகவலை யற்றுமேலுற்ற பர
வசமாகி அழியாததோர்
ஆனந்தவாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட பூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 04

மிகையும் துரத்த வெம்பிணியும் துரத்த நனி
வெகுளியானதும் துரத்த
மிடியும் துரத்த நரைதிரையுமட துரத்தமிகு
வேதனைகளும் துரத்த
பகையும் துரத்த வஞ்சனையும் துரத்தவரு
பசியென்பதும் துரத்தப்
பாவம் துரத்த வெகு மோகம் துரத்தஉறு
பல காரியமும் துரத்த
நகையும் துரத்த ஊழ் வினையும் துரத்த
வாழ் நாளும் துரத்த வெகுவாய்
நாவறண்டோடியே கால்தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதாரதெய்வமே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரான் திருவடி

01. நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி கிளியே!
இரவுபகல் காணேனெடி

02. ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி

03. தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி

04. எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி

05. பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி

06. பரிதிகாளில் வாடாது
பவனம்வீ சில் வீ ழாது
பரவைசூழில் ஆழாதெடி கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி கிளியே!
சீரார்நல்லூராசானெடி

08. வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி கிளியே!
விளங்குநல்லூர் வாசனெடி

09. சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி கிளியே!
கலங்காத வீரனெடி

10. சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

இப்பரந்த உலகின் ஒரு தனிப்பொருளாய், ஆண், பெண் ஆகிய இரு வடிவாய், எழுச்சி, மயக்கம், அமைதி (ரஜோ, தமோ, சத்வம்) எனும் மூன்று குணங்களாய், நான்கு மறைகளாய், மண், தீ, நீர், காற்று, விசும்பு என்னும் மூலப்பொருள் ஐந்தாய், இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு எனும் ஆறு சுவைகளாய், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழிசையாய், எண்பெருந் திக்குகளாய், எம்பெருமான் எங்கணும் நீக்கமற நிறைந்துள்ளான். - திருஞானசம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழநி சுப்பிரமணியக் கடவுள் பேரில்
# தரிசனைப்பத்து

திருச்சிற்றம்பலம்

தற்பரனே மெய்ப்பொருளே சக்தி வேலா
சங்கரனார் தன்மகனே வாவா என்முன்
வெற்றிவேல் தரித்த முருகையா வென்று
விண்ணோர்கள் தான்துதிக்கும் வேந்தர்கோவே
அற்புதமாய் உந்தனிடம் வந்தபேர்க்கு
அருள் கொடுத்துப் பிணிதீர்க்கும் முருகநாதா
கற்றறியா என்தன்னைக்காக வாவா
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 01

தாண்டியே உனைநம்பி வந்தபேர்க்குத்
தவறாமல் வரங்கள் அள்ளிக் கொடுக்கும் வேலோன்
வேண்டியே யுன்பாதம் விரும்பினோர்க்கு
வினைதீர்த்து அருள்செய்யும் விண்ணோர் கோவே
ஆண்டியைப்போல் தினைப்புனத்தில் வள்ளிதன்னை
அணையவென்று மனதிலெண்ணிச் சென்ற வேலா
காண்டீபன் தனக்கு வரங் கொடுத்தோன் மைந்தா
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 02

திருத்தணிகை வாசா உன்பதந்தை யானும்
தினமும் என் மனதில் எண்ணிக் கலங்குகின்றேன்
கருத்துவைத்து என்னை நித்தம் காக்கவேணும்
கரியமால் தன்மருகா கதிரைவேலே
பெருக்கமத வாரணந்தான் கராவுக்கஞ்சித்
தான் நின்று ஓலமிட்டவாறு போல
வருத்தமுற்ற என்னைத்தான் காக்கவேணும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத மனக்கவலை தீர்ப்பாயென்று
சித்தத்தில் உனை நினைத்து கலங்கிறேன் நான்
வாரணத்தைக் காத்து வரங் கொடுத்த வேலே
மாயவனார் தன்மருகா வள்ளிவாழ்வே
பார்போற்றும் வடிவுமையாள் மைந்தா உன்றன்
கடைக்கண்ணாற் பார்த்தால் என் கவலை தீரும்
சீரான அசுரர்குலம் தன்னை வென்ற
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 04

துங்கமுறு கோபுரத்துக் குள்ளிருந்து
துரிதமுடன் உனையேற்றி வாறபோது
அங்கமெல்லாம் வெடுவெடுத்து ஆடிநின்று
அபயமென்று கையேந்தி நிற்கின்றேன்பார்!
பங்கயம்சேர் மடவார்கள் இருவரோடு
பச்சைமயில் ஏறிவந்துன் பாதங்காட்டி
கங்கையணிந்தோன் மகனே கருணைசெய்வாய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 05

தூண்தனிலே அரியிருப்பார் என்றுசொல்லித்
துயரமுற்ற பிரகலாதன் தன்னைக்காக்க
வேண்டியே நாசிங்க ரூபங்கொண்டு
வினைசெய்த இரணியனைக் கொன்று வெற்றி
நீண்டதனால் துயரமுற்ற இமையோர்தம்மை
நலம்காத்து அருள் கொடுத்தார் உனது மாமன்
தீண்டுதுயர்தனைப் போக்கப் பணிகின்றேன் நான்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 06

தெண்டனிட்டேன் உன்பதத்தை மனதிலெண்ணித்
தீராத கவலையுடன் திரிகிறேன் யான்
மண்டலத்தில் என்துயரம் தீர்க்க இன்னும்
மனமுனக்கு இரங்கலையோ வானோர்கோவே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டனிட்டேன் வள்ளியம்மை தெய்வானைத்தாய்
தெரிசனைகள் ஒருபோதுங் காணேனையா
கண்டு உன்னைத் தரிசிக்கக் கருணைதாரும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 07

தேடரிய பூவுலகில் உன்னையல்லால்
சித்தம் வைத்தருள் செய்வார் ஒருவரில்லை
காடதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டெடுத்த கன்னிக்காக
வேடர்தங்கைதனைநாடி வனத்திற்சென்ற
வித்தகனே எனக்கு நின் கருணைதாரும்
நாடியுனை நான்பணிய வரத்தைத்தாராய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 08

தையலர்கள் தீவட்டி பிடித்து நிற்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச
மெய்யுடைய ஆறுமுகவேலோ என்று
வேண்டியே அடியார் கையேந்தி நிற்க
கையிழந்தவன் நிலையிற் கலங்கிறேன்யான்
காருமையா கருணைவைத்துக் கார்த்திகேயா
ஐயாமின்றி மனந்திறந்தேன் காட்சிதாரும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 09

தொண்டரெல்லாம் வந்து நித்தம் பணிந்து போற்றத்
தோகையர்கள் இருவருடன் அமர்ந்தமூர்த்தி
வண்டமிழ்சேர் பொய்கை தன்னில் உதயமான
வடிவேலா வந்து மனத்துயரத்தீர்ப்பாய்
பண்டுமறை சிறந்திலங்க உனதுபாதம்
பரிவுடன் பணிந்து நான் பல நாளாகத்
தொண்டுகண்டு செய்யவரந்தருவாய் நாளும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோகைமயில் மீதேறும் கார்த்திகேயா
தொழுது என்றும் உன்பாதம் பணிந்தபேர்க்கு
மேகமது பயிர்க்குதவி செய்தாற்போல
வினையகற்றி யருள் புரிவாய் விண்ணோர்கோவே!
தேகமெனும் பொய்யுடலைச் சதமென்றெண்ணிச்
சிந்தைமிக நொந்துமனம் வாடுறேன்யான்
நாகவிடங் கொண்டகண்டர் மைந்தாகப்பாய்!
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 11

தௌவெனவே உதயகிரி நடுங்கமுந்நாள்
தாண்டவம் ஆடிநின்றோன் மகனேவாவ
சவ்வென்றும் கிலியென்றும் சிவாயவென்றும்
சகலவிதிமுறைபணிய அறியேன் நானே
கவ்வியே எனைச்சூழும் பிணியும் நோயும்
கடுவிஷமும் பிசாசுகளும் கண்டேஅஞ்சி
உய்வின்றிப் பறந்தோடக் கிருபை செய்வாய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 12

திருச்சிற்றம்பலம்

சந்தனம், மலர், நறும்புகை, விளக்கு, நீர், திருவமுது முதலியவெல்லாம் மனத்தால் பாவித்து, அகத்தே சிவபெருமானை வழிபட்டு நினைய, நினையக் கண்ணாடியை மாசு போகத் துலக்கிய இடத்து ஒளி மிகுதல் போல, உயிரிடத்துச் சிவம் மேலிட்டு விளங்கும், மலமும் நீங்கும். - சிவஞான சித்தரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகுமலைப்பத்து

திருச்சிற்றம்பலம்

கழுகுமலை தனில் உறையும் முருகவேளே
கருத்துடனே உன் பாதமலர் தானே ஓதப்
பழுதொன்றும் வாராமற் காக்கவேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதி யின்மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்கவேணும்
வரும்பிழைகள் தனையகற்றி வழியே செய்வாய்!
தெளிவாக உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 01

காடுதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டு கடுவேகத்தாலே
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசைகத்தி
தானெடுத்தார் தவிபொடியாக்க வென்று
கூடிய குறவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமரவேள் என்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே யுன்பாதந் துதிப் பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 02

கிட்டாத பொருள் தன்னைப் போலெந்நாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்
எட்டி எட்டியே உன்னைப் பார்க்கும் போது
ஏமாற்றி என்னைவிட்டு ஏகலாமோ?
சட்டமுடன் தோகைமயில் மீதிலேறிச்
சடாட்சரமாய் என்முன்னே தோற்றவேணும்
திட்டமுடன் உன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்
கிருபையுடன் உன்பதியை தேடிவாறேன்
பூத்தமலர் போலுன்னைக் காண்பதெப்போ?
புண்ணியனே எனக்கு வரந்தருவ தெப்போ?
வார்த்தையொன்று உரையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மனதன்பாகத்
தீர்த்தங்கள் ஆடியுனைத் துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 04

குவலயத்தில் அடியேன் நான் செய்தபாவம்
குற்றமெலாம் பொறுத்துனது குழந்தையைப் போல்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பது உன்செயலல்லோ கார்த்திகேயா
சவலை இளங்கன்றது தன் தாயைத்தேடித்
தயங்குவது போல நான் தியங்கலானேன்
சிவலை நிற மார்பழகா செந்தூர்க்கந்தா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 05

கூடியே மறலியென்னைப் பிடியாவண்ணம்
கெடுநரகிலே யானும் வீழ்ந்திடாமல்
வாடியே மனம் மெலிந்து போகாவண்ணம்
ஆகவே உன்னுடைய கீர்த்திதந்து
பாடியே பவனொளி பவாயம் என்றால்
பறக்குமே பசாசிமுதல் ஏவல்தானும்
தேடியே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 06

கெடுதியுள்ள சூரனை வதையே செய்தாய்
கிளி மொழியாள் வள்ளி தினைப் புனத்திலேதான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
பாசிபற்றியே பழுத்த கிழவனாகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடியூன்றித் தண்டுகமண்டலமும் கொண்டு
சாட்டாங்கமாய்க் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடியே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 07

கேசவனார் மருகோனே நீசெய்கோலம்
கெடிதான குமரகுர வேடனாகி
நேசமுடன் கையில் அம்பு வில்லுங்கொண்டு
நிமிஷமுடன் வள்ளிதினைப் புனத்திலேதான்
பாசமுடன் பெண்ணே கண்ணேயென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் கொண்டாய்
தேசமெலாம் திரிந்தலைந்தேன் உன் பாதங்காண
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 08

கையிலே கோழிக் கொடியும் வேலும்
வள்ளி தெய்வானையுடன் மயில்மீதேறி
தைய நல்லார் தூபதீபம் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச
மெய்யுடனே ஆறுமுகரூபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள்தாரும்
தெய் தெய் என்றுன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 09

கொன்றைமலர் வேணியனின் நெற்றிக்கண்ணில்
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டரெல்லாம் உனைக்காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணியில் நிற்பார்
தண்டை கிண்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடி வந்தெனக்குன் ஒளியைக்காட்டும்!
தெண்டனிட்டே உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதையர்கள் இருபுறமும் கவரிவீசக்
குளிரான மதிமுகங்கள் ஆறுந்துன்னக்கு
காதலுடன் பன்னிருகை வேலுண்டுன்னக்
கான மயில் மீதேறுங் கார்த்திகேயா
வாதுடனே சோதையன் செய் சிகரந்தன்னை
வடிவேலால் நீறுசெய்த வானோர்கோவே
சீத மருகோனே உன் புகழைச் சொன்னேன்
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 11

கவ்வியேபூத மென்னைப் பிடியாவண்ணம்
காத்துனது கிருபைதந்து இரட்சியும் ஐயா
வவ்வியே மெய்மறந்துமொரு பாசாசுதானும்
பவனொளி பவாயம் என்றால் பறக்குமேதான்
ஒவ்வியே எனைச்சூழும் லாடன் மாடன்
ஓம் நவசிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 12

இக்கணமே இது நல்ல வேளையையா
இதோ பாரும் சந்நிதியில் திருவிழாவை
வணக்கமாய்க் கற்பூர மடவிளக்கு
வகை வகையாய்க் கன்னியர்கள் ஏந்தி நின்றார்
எக்காளம், பேரிகை, தம்புரா, நல்மேளம்
இடியெனவே எத்திசையும் முழங்கி நிற்க
இக்கணமே உன்பாதம் துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகனை தரிசிப்பாயே! 13

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரேசப்பத்து

திருச்சிற்றம்பலம்

நீடாழி சூழ்உலகில் கண்கண்ட தெய்வம் நீ
நிலையார்ந்த குருபரனும் நீ
நிதியும்நீ பதியும்நீ, மறையும்நீ, பொருளும்நீ
நித்திய முருகேசனும்நீ
வாடாத தவமும்நீ மதியும்நீ வதியும்நீ
வல்லகர சங்காரன்நீ
மங்காத செல்வம்நீ மகிமைப்பிரதாபன்நீ
வாய்ந்த தாய் தந்தையும்நீ,
கோடாத குமரன்நீ கொங்சுதமிழ் கடவுள்நீ
கூற்றை உதைத்தோன் மகனும்நீ
கூறுமடியார்க் கருளும் குஞ்சரி மணாளன்நீ
கோந்தலர் கடம்பனும்நீ
காடாளும் குறவள்ளி பாகனே எளியோனைக்
காப்பதுன் பாரமன்றோ
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 01

மண்ணாட மலையாட மயிலாட அயிலாட
மங்கைகுற வள்ளியாட
மாலாட மறையாட மதியாட விதியாட
வானவர் கோனுமாட
விண்ணாட மேருமலை கங்கைவேணியனாட
வித்தககணேசனாட
மிஞ்சுகிண் கிணியாட செஞ்சேவற் கொடியாட
விற்பனர்கள் கூட்டமாட
பண்ணாட, வருமுனிவர் சித்தரொடு எண்திக்குப்
பாலகரும் மேவியாடப்
பனிமலர் கடம்பாடப் பக்தரெல்லாம் ஆடப்
பரதமிடு மாதராட
கண்ணாட இதுவெளை காட்சி தந்தாளவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிந்தென்முன் ஓடிவருவாய்
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 02

சாரமில்லாத சஞ்சாரத்திலே தினமும்
சஞ்சல வாழ்க்கை கொண்டு
தப்பாமல் இப்புவியில் சாண்வயிற்றுக்காகத்
தந்திரமெலாம் படித்துச்
சீரழிவு, பொய், சூது நிந்தைசேர் மார்க்கமே
தேர்ந்து மிகவேயுழன்று
செப்பரிய நன்மார்க்க ஜோதியே காணாமல்
சிந்தையிருட் கோட்டமாகித்
தாரணியிலே முழு மூடனாய்த்திரிகின்ற
தன்மை யெல்லாந் தெரிந்தும்
தமியேனை இன்னமும் ஆட்கொள்ள ஒண்ணாது
சாதிப்பதழகாகுமோ?
காரவுணர் படைவென்றவீரப்பிரதாபனே
கண்ய குஞ்சரி மோகனே
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 03

பூணும் பணிக்கல்ல புனித வாடைக்கல்ல
பொன்றாக வாழ்வுக்கல்ல
புவியில் பலமாடிகள் கொண்டுலவுதற்கல்ல
போந்தமனை செல்வமக்கள்
பேணும்படிக்கல்ல, பெரியோனெனப் படியில்
பேசுவதற்காககல்ல
பெருமையால் எண்திசையும் புகழ் கொள்வதற்கல்ல
பேருலகிலே பிறந்து
சாணும் வளர்க்கல்ல தக்க பொருளீட்டியே
தாஷ்டீக மடையவல்ல
சந்தகம் மயில்மீது வள்ளி தெய்வானையொடு
சார்ந்து வருதரிசனந்தான்
காணும்படிக்கு நான் வேண்டினேன் வந்தருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகாபி ஷேக முருகா
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 04

தெள்ளறிவு சற்றேனும் இல்லாத சேயெனினும்
தேடாத தந்தையுண்டோ
எந்த நேரந்தனிலும் இணையடியைத் தொழுதபின்
இரங்காத நெஞ்சமுண்டோ
ஈரேழு லோகமும் வந்திக்கும் கடவுள்நீ
என்குறை யறிந்திடாயோ
விந்தையும் மாயமும் நீயே புரிந்திடில்
மீட்கவோர் தெய்வமுண்டோ
மேதினியெலாம் படைத்தோங்கும் மகா மகா
வீரப்பிரதாபனன்றோ?
கந்தமிகு குழல்வள்ளி தெய்வானையார் தங்கள்
காதற்கிசைந்த கணவா
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 05

நெறிகொண்டு நின்னடி போற்றாத போதிலும்
நெஞ்சில் ஒண்ணாதபோதும்
நிலைகொண்ட நின்கோயில் வாராதபோதிலும்
நேரில் வாராதபோதிலும்
வெறிகொண்ட மூர்க்கனென்றிங்குற்ற போதிலும்
வீணென்றழிந்த போதும்
வேசியரை நாடினும், மோகமே செய்யினும்
மேதையரை நிந்தை செயினும்
குறிகண்டு காப்பதும் தாய்தந்தைக்கல்லோ
குற்றமது எனக்கல்லவே!
குவலயத்தோர் உன்னை ஏசிடாரோ எந்தன்
குறைதீர்த்தல் பெரிதோ பிள்ளைக்
கறியுண்ட பரமற்குப் பிரணவமுரை செய்த
கண்ணாயிரன்றன் மருகா
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாத லோபி என்றே பெயரெடுத்தனோ?
எளியவரை இம்சித்தனோ?
எள்ளளவு மெண்ணாது குருநிந்தை செய்தனோ?
ஈந்த பொருள் இல்லையென்றனோ?
மாயா வருத்தமுறப் பெற்றதோர் மாதாவை
மனம் வருந்தச் செய்தேனோ?
வஞ்சனை புரிந்தேனோ மாதர்பழி கொண்டேனோ?
வழியதனில் முள் இட்டனோ?
வாயாரப் பொய் சொல்லி மண்ணுலகில் வாழ்ந்தனோ?
மாதவரை ஏசினேனோ?
ஈனமொன்றெண்ணியே, வாக்கொன்று சொல்லியே
வன்செயல் ஒன்றே கண்டனோ?
காயாத பூம்பொழில் மேவுமுருகா எல்லாம்
கடிதே பொறுத்தருளுவாய்
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 07

அன்னையும் இருந்தென்ன? தந்தையும் இருந்தென்ன?
ஆரார் இருந்துமென்ன?
அரும்பொருள் இருந்தென்ன? பெருமையுற வாழ்ந்தென்ன?
அம்புவியை ஆண்டுமென்ன?
தன்நிகரில் அட்டமா சித்து விளையாண்டென்ன?
தலங்கள் பல சுற்றியென்ன?
தாஷ்டீகங் கொண்டென்ன? தர்மம்மிகச் செய்தென்ன?
தண்புனலில் மூழ்கியென்ன?
மன்னும் இப்பேருலகில் தீர்க்கமுடன் இதுவெலாம்
மறலியைத் தடுக்க வாமோ?
மாசுற்ற சந்தையின் கூட்டமிது என்றுதான்
மலரடியை வந்தணுகிறேன்
கன்னல் மொழி வள்ளி தெய் வானையர்தம் மோகனே
கண் பார்த்தருள் புரிகுவாய்
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை சொல்லியும் கேளாதிருக்கஉன்
இதயந்தான் என்ன கல்லோ?
ஈராறு காதிருந்து ஏறாத மந்தமோ?
ஏழைமேல் நிர்ப்பந்தமோ?
நித்தியம் குறவள்ளி மோமோ? முந்நாளில்
நேர்ந்திட்ட சாபந்தானோ?
நீதியோ நானென்ன வாதியோ? நெஞ்சிலிதை
நினைந்திடவும் நேர்மைதானோ?
இத்தரையில் கண்கண்ட தெய்வநீ ஆனதால்
இனியுன்னை நான் விடுவனோ?
என்றென்றும் உன்னடிமை இன்னலேகொண்டுழல்தல்
ஈதுனக் கழகுதானோ?
கத்து கடல் சூழ் புவியில் நத்தியருள் செய்குவாய்
கருணைப்பிரகாச முருகா
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 09

ஜகமெலாஞ் சுற்றியே வந்தாலும் நின்போலத்
தரிசிக்கத் தெய்வமுண்டோ?
சார்ந்திட்ட முன்வினைகள் தீர்ந்து சுகபேரின்பம்
தந்தருளுந் தெய்வமுண்டோ?
எளியோர்தம் குறைதனை அன்போடு உளந்தனில்
ஏற்கவோர் தெய்வம் உண்டோ?
பகரரிய செல்வமும் மங்காத கீர்த்தியும்
பாலிக்கும் தெய்வம் உண்டோ?
பக்தர்களுக் காதார மூர்த்தியென்றுன்னையே
பண்புடன் போற்றிநின்றேன்
ககனதேவாதியர்கள் சேவிக்கும் பாதனே
கண்பார்த்தருள் புரிகுவாய்
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காம கதிரேசனே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயனார் துதி

திருச்சிற்றம்பலம்

1. பூரணைக் கிறைவா போற்றி
புட்கலை கணவா போற்றி
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி
ஆரணச் சுருதி எல்லாம்
அடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி

2. அரியயன் புதல்வா போற்றி
ஐங்கரன் துணைவா போற்றி
சபரிமலையில் வந்தே
தன்னருள் பொழிவாய் போற்றி
உரிமையாய் துத்தியில் உறைந்து
எமக்கு அருள்வாய் போற்றி
திரிபுரம் எரித்த''எங்கள்
சிவன் திருமகனே போற்றி

3. வெள்ளை வாரணத்து அமர்ந்து
வினையெலாம் களைவாய் போற்றி
கள்ளத்தை மனத்து அகற்றி
கருணையைப் பொழிவாய் போற்றி
உள்ளத்துள் உண்மை என்ற
ஒளியினைத் தருவாய் போற்றி
பள்ளத்தில் வீழ்ந்திடா தென்னையும்
பாதத்திற் சேர்ப்பாய் போற்றி

ஐயப்ப சுவாமியே சரணம்
சரணம் ஐயப்ப சுவாமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாவிஷ்ணு

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரும் செய்யும் நீள்விசும்பு அருளும் அருளொடு பெருநிலம்
அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா
என்னும் நாமம்
- திருமங்கையாழ்வார்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு

அருமறை முதல்வனை ஆழி மாயனை
கருமுகில் வண்ணனை கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி வாழ்த்துவோம்.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் ஜோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சஜன்னியமும் பல்லாண்டே

அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை
இண்டைக் குலத்தையெடுத்துக் களைந்த ரிஷிகே சன்தனக்குத்
தொண்டக்குலத்திலுள்ளீர்! வந்தடி தொழுது ஆயிரநாமம் சொல்லிப்
பண்டைக்குலத்தைத் தவிரிந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே
- பெரியாழ்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகளில் வீரபத்திரர்

திருச்சிற்றம்பலம்

1. காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடலூர்வீ ரட்டானம் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுவீ ரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன் தமரும் சிவன்தமரென் றகல்வர் நன்கே
- திருநாவுக்கரசு நாயனார் - (அட்ட வீரட்டத் தலவரிசை)

2. எச்சன் நிணைத் தலைகொண்டார் பகன் கண் கொண்டார்
இரவிகளில் ஒருவன்பல் இறுத்திக் கொண்டார்
மெச்சன் வியத்திரன் தலையும் வேறாக் கொண்டார்
விறலங்கி கரம் கொண்டார் வேள்வி காத்த
உச்ச நமன்தாள் அறுத்தார் சந்திரனை உதைத்தார்
உணர்வில்லாத் தக்கன்தன் வேள்வியெல்லாம்
அச்சம் அற அழித்துக்கொண் டருளும் செய்தார்
அடியேரன ஆட்கொண்ட அமலர்தாமே.
- திருநாவுக்கரசு நாயனார் -

3. மலைமகள்தனை இகழ்வது செய்த
மதியறு சிறுமனவனது உயர்
தலையினொடு அழல் உருவன் கரம்
அறமுனிவு செய்தவன் உறைபதி
கலை நிலவிய புலவர்கள் இடர்களை
தருகொண்ட பயில்பவர் மிகு
சிலைமலி மதில்புடை தழுவிய
திகழ்பொழில் வளர் திருமிழலையே.
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - (திருவீழிமிழலைப் பதிகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தக்கனது பெருவேள்வி சந்திரன் இந்திரன் எச்சன்
அருக்கன் அங்கி
மிக்க விதா தாவினொடும் விதிவழியே தண்டித்த
விமலர் கோயில்
கொக்கினிய கொழும் வருக்கை கதலி கமுகுயர்தெங்கின்
குலைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா நீள்வயல் சூழ்
முதுகுன்றமே.
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - (திருமுதுகுன்றுப் பதிகம்)

5. உரித்தது பாம்பை உடல்மிசை இட்டதோர் ஒண்களிற்றை
எரித்ததொர் ஆமையை இன்புறப் பூண்டது முப்புரத்தை
செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்திரு வெங்குரு வில்வீற் றிருந்தவரே!
- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் - (திருப்பிரமபுரப் பதிகம்)

6. ஓங்கி உயர்ந்தெழுந்து நின்ற நாளோ
ஓர்உகம்போல் ஏழ்உகமாய் நின்ற நாளோ
தாங்கியசீர்த் தலையான வானோர் செய்த
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்தநாளோ
நீங்கியநீர்த் தாமரையான் நெடுமாலோடு
நில்லாய் எம் பெருமானே என்றங்கேத்தி
வாங்கிமதி வைப்பதற்கு முன்னோ பின்னோ
வளர்ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே
- திருநாவுக்கரசு நாயனார் - (திருவாரூர்ப் பதிகம்)

7. பழிக்கும் பெருந்தக்கன் எச்சம் அழியப்
பகலோன் முதலாப் பலதேவரையும்
தெழித்திட்டு அவர்அங்கம் சிதைத்தருளும்
செய்கை என்னை கொலோ மைகொள் செம்மிடற்றீர்
விழிக்கும் தழைப் பீலியொடு ஏலம் உந்தி
விளங்கும் மணிமுத்தொடு பொன்வரன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்பத்தூர் அழகனீரே!
- சுந்தரமூர்த்தி நாயனார் - (திருஅரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகம்)

8. தக்கன்தன் வேள்வி தகர்த்தவன் சார மதுவன்றுகோள்
மிக்கன மும்மதில் வீயவொர் வெஞ்சிலை கோத்தொரம்பால்
புக்கனன் பொன்றிகழ்ந் தன்னதோர் பூந்துருத் திய்யுறையும்
நக்கனை நங்கள்பி ரான்றனை நானடி போற்றுவதே.
- திருநாவுக்கரசு நாயனார் - (திருப்பூந்துருத்திப் பதிகம்)

9. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீபற!
உருத்திர நாதனுக்கு உந்தீபற!

10. பார்பதியைப்பகை சாற்றிய தக்கனை
பார்ப்பது என்னேடி உந்தீபற!
பணைமுலை பாகனுக்கு உந்தீபற!

11. உண்ணப் புகுந்த பகன் ஒளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற!
கருக்கெட நாம்எலாம் உந்தீபற!
- மாணிக்கவாசகர் திருவாசகம் - (திருவுந்தியர்)

12. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லுமவர் கதிரோன்தன் பல்தகர்த்து
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்
- திருவம்மானை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. தந்தைபி ரான்வெகுண் டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினம் செய்த போதே

தெளிந்தார் கலங்கினும் நீ கலங்காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தானது தக்கன் வேள்வியை வீயச்
சுளிந்தாங் கருள் செய்த தூய் மொழி யானே.

- திருமூலர் திருமந்திரம். -

14. வேதவெற்பிலே புனத்தில் மேவிநிற்கும் அபிராமா
வேடுவச்சி பாதபத்ம மீது செச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி புயநேய
ஆதரத்தோ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே
காதுமுக்ர வீரபத்ர காளி வெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி இமையோரை
ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த பெருமாளே.

- அருணகிரிநாதர் திருப்புகழ் -

திருச்சிற்றம்பலம்

இறைவன் வேண்டுதல் இல்லாதவன், அவனுக்கு இன்ன சாதி பிடிக்கும், இன்ன மொழி பிடிக்கும், இன்ன சோறு பிடிக்கும் என்பதும், இன்னதைக் கொடுத்தால், இன்னது தருவான் என்பதும் பொய்ம்மை, மனிதர் செய்து வைத்த சூது. அவன் எல்லாவற்றையும் கடந்தவன். வைதாரையும் வாழ வைப்பவன். இதுவே உயர்ந்த சமயம்.

- குன்றக்குடி அடிகளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம்

(உபாசன குலபதி ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளியது)

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பாதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப்புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 01

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 02

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடைமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 03

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பாள்
நான்முகன் நானென்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 04

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணன் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 05

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 06

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய க்ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம் புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் 08

## பிரயோக ஜோதி

இந்த ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம் தனச் செழிப்பைத் தருவது. வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமை இரண்டு நாட்களிலும் சந்தியா காலங்களில் படிப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றியையும், தன விருத்தியையும் அடைவார்கள். பௌர்ணமியன்று இரவு எட்டு மணிக்கு தீபத்தை ஏற்றி வைத்துக்கொண்டு பதினெட்டு தடவை பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒன்பது பௌர்ணமி பாராயணம் செய்தால் கண்டிப்பாக தன லாபத்தை அடைவார்கள். நீண்ட நாட்களாகப் பிடித்துக் கொண்ட வறுமையிலிருந்து விடுபடுவார்கள். ஒன்பதாவது பௌர்ணமியன்று அவலில் பாயாசம் செய்து நிவேதிக்கலாம். வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப நிவேதனப் பொருளைக் கூட்டிக் கொள்ளலாம். அளவற்ற கீர்த்தியையும், தனத்தையும் தரும் இந்த பௌர்ணமி பூஜையை விடாமல் செய்பவர்களுக்கு சந்தோஷம் நிரந்தரமாக இருக்கும்.

தத்தம் பெருமை பற்றித் தாமே அறிவித்துக் கொள்வது கீழோர் தன்மை தமது சிறுமை பற்றி அறிவித்துக் கொள்வது அறிவுடைப் பெரியோர் தன்மை. - சிவக்கவிமணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிக்கவி

## (உமாபதி சிவாச்சாரியார் அருளியது)

சிதம்பர நடராசப் பெருமானின் கொடியேற்ற உற்சவத்தன்று கொடித்தம்பத்தில் உயர ஏறாமல் கீழே விழுந்த கொடிச் சேலையை உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவி என்னும் பஞ்சாச்சரப் பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளியதும் விழுந்த கொடி தானாகவே உயர ஏறிப் பட்டொளி விசிப் பறந்தது. 1310ம் ஆண்டு தொடக்கம் இக்கவி சகல கோவில்களிலும் கொடியேற்றத்தின் போது பாடப்பட்டு வருகின்றது.

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன்(று)
ஒளிக்கும் எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும், திரிமலத்தே
குளிக்கு முயிர், அருள் கூடும்படிக் கொடி கட்டினனே!

நேரிசை வெண்பா

1. பொருளாம் பொருள் ஏது? போதேது? கண்ணேது?
இருளாம் வெளியே(து)? இரவே(து)? - அருளாளா!
நீ புரவா வையமெலாம் நீ அறியக் கட்டினனேன்
கோபுர வாசற் கொடி

2. வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா(து) உணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி

3. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தனையுங்
கூசாமற் காட்டக் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மஹோற்சவ காலத் திருமுறை
# மஹோற்சவத்தின் போது தம்பத்தடியில் ஓதவேண்டிய திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

1. பண் :- தக்கராகம் இராகம் :- காம்போதி

மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே

2. பண் :- காந்தாரபஞ்சம் இராகம் :- கேதாரகௌளை

தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவியலும் முடி பொன்று வித்தபழி போயற
ஏவியலுஞ் சிலையண்ணல் செய்த வீரா மேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்மேல் வினைவீடுமே.

3. பண் :- நட்டபாடை இராகம் :- கெம்பீரநாட்டை

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத் தவளோடும்
நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே.

4. பண் :- இந்தளம் இராகம் :- மாயாமாளவகௌளை

விண்ணிலான பிறைசூடுவர் தாழ்ந்து விளங்கவே
கண்ணினால நங்கன்னுடலம் பொடியாக்கினார்
பண்ணி லானஇசை பாடல்மல் குந்திருவாஞ்சியத்
தண்ணலார் தம்மடிபோற்ற வல்லார்க்கில்லை யல்லலே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ சந்திகளில் ஓதவேண்டிய
# தேவாரப் பண்கள்

திருச்சிற்றம்பலம்

1. பிரம்மசந்தி : ஆகாசம் பண் :- மேகராககுறிஞ்சி

சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரணென்று
சிறந்த அன்பால், நாவியலும் மங்கையொடு நான்
முகன்றான் வழிபட்ட நலங்கொள் கோயில்
வாவிதோறும் வண்கமலம் முடங்காட்கச் செங்கு
முதம் வாய்கள் காட்டக், காவியிருங் கருங்கு
வளை கருநெய்தல் கண்காட்டுங் கழுமலமே.

2. இந்திரசந்தி : கிழக்கு பண் :- காந்தாரம்

மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார் வேதமுடைய விமலர்
கண்ணுமோர் பாகமுடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார் பெரும்புலியூர் பிரியாரே

3. அக்கினிசந்தி : தென்கிழக்கு பண் :- கொல்லி

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
அருத்தனார் ரழகமர் மங்கையோர் பாகமாய்
பொருத்தனார் கழலினை போற்றுதல் பொருளதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. யமசந்தி : தெங்கு பண் :- கௌசிகம்

வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்
துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்குந் தண்புனல் சூழ்திரு ஆரூரன்
இளைக்கும் போதெனை யேன்றுகொ ளுங்கொலோ

5. நிருதிசந்தி : தென்மேற்கு பண் :- நட்டபாடை

மைம்மருபூங்குழற் கற்றைதுற்ற வாணுதல்மான் விழிமங்கையோடும்
பொய்ம்மொழியா மறையோர்கள் ளேத்தப் புகலி நிலாவிய
- புண்ணியனே
எம்மிறையே யிமையாத முக்கண் ஈசஎன்நேச இதென்கொல்
- சொல்லாய்
மெய்ம்மொழி நான் மறையோர் மிழலை விண்ணிழி கோயில்
- விரும்பியதே.

6. வருணசந்தி : மேற்கு பண் :- சீகாமரம்

மங்கையோர் கூறுடையான் மன்னு மறைபயின்றான்
அங்கையோர் வெண்டலையானாடரவம் பூண்டு கந்தான்
திங்களொடு பாம்பணிந்த சீரார் திருமுடிமேல்
கங்கையினான் மேவியுறை கோயில் கைச்சினமே.

7. வாயுசந்தி : வடமேற்கு பண் :- தக்கேசி

மங்கைபங்கனை மாசிலாமணியை வானநாடனை யேனமோ
டன்னம் எங்கு நாடியுங் காண்பரியானை யேழையேற்
கெளிவந்தபிரானை அங்கநான் மறையால் நிறைகின்ற
அந்தணாளாரடியது போற்றும் நங்கள் கோனை
நள்ளாறனை அமுதை நாயினேன் மறந்தேன்னினைக்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. குபேரசந்தி : வடக்கு பண் :- தக்கராகம்

பெண்ணோர் பாகமுடையார் பிறைசென்னிக்
குண்ணோர் பாகங்கலந்த நுதலினார்
எண்ணாதாக்கனெடுக்கவூன்றிய
அண்ணல்சோற்றுத் துறைசென்றடைவோமே

9. ஈசானசந்தி : வடகிழக்கு பண் :- (சாலபாணி) சாதாரி

எந்தமதுசிந்தை பிரியாத பெருமானென இறைஞ்சி
யிமையோர் வந்து துதி செய்ய வளர் தூபமொடு தீபமலி
வாய்மையதனால் அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அழகன் சந்தமலி குந்தள நன் மாதி
னொடு மேவுபதி சண்பை நகரே

சிவபூசை, அடியார் பூசை குரு பூசை ஆகிய வழிபாடுகளுக்கு எத்துணைப் பயன் உண்டோ, அத்துணைத் பயன் திருமுறை வழிபாட்டிற்கும், பாராயணத்திற்கும் உண்டு. திருமுறைகளை ஓதி உணரும் இயல்புடையோர், இவ்வுலக வாழ்க்கையில் நேரும் எல்லாத் துன்பங்களும் நீங்கி, எல்லா நன்மைகளையும் பெற்று இன்புறுவார்.

"இம்மை யேதரும் சோறும் கூறையும்,
ஏத்த லாம்இடர் கெடலுமாம்,
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற(வு) இல்லையே." (7:34:1)

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறியவாறு, திருமுறைகளை ஓதி வழிபடுவோர் இருமைப் பயன்களையும் ஒருங்கே பெற்று இன்புறுவர் என்பது திண்ணம்

- பன்னிரு திருமுறை வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1: வினையால் பிறப்பும், பிறப்பால் வினையுமாய் மாறிமாறி வரும் சூழலினின்றும் நீங்கி, அவ்வினையை அறுத்துக் கொண்டு விடுபடுவதற்கு வழியாவது, சிவபுண்ணியமே அல்லாது வேறொன்று இல்லை.

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்னும் திருக்குறளும் இதனையே வலியுறுத்துகிறது.

- சித்தாந்தத் தெளிவியல்.

2. எல்லாச் சமயங்களும் இறைவனால் உண்டாக்கப் பெற்றனவே. மக்கள் அவரவர் அறிவாற்றலுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்து ஒழுகுகின்றனர். எனவே ஒரு சமயத்தார் மற்றொரு சமயத்தார் மேல் வெறுப்பும், காழ்ப்பும் கொள்ளக்கூடாது.

- வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை

3. இறையடியார்களில் சிலர் இறைவன் அடியே எல்லாமாகப் பற்றியிருக்கும் முமூட்சுக்கள் (வீடுபேற்றில் விருப்பம் உடையோர்) இவர்கள் உத்தமமான அடியார்கள். தாபத்திரயங்களால் (தெய்வத்தால் வரும் துன்பமாகிய ஆதிதைவிகம், ஐம்பூதங்களால் ஏற்படும் துன்பமாகிய ஆதிபௌதிகம், தன்னைப்பற்றி வரும் துன்பமாகிய ஆத்தியான்மிகம் என்னும் மூன்றினால்) துன்புறுவோர், அவ்வுபாதை (வேதனை) தீர வழிபடுவர். இவர்கள் மத்திமர். ஈஷாணத்திரயம் என்னும் உலக சுகபோகங்களை நாடி, இறைவனைப் பொன் - பொருள் வேண்டி வழிபடுவோர் அதமர். ஆயினும் நல்ல கருமங்களைச் செய்து, இறைவன் அருள் புரிவான் என்னும் திடநம்பிக்கையோடு, இறைவனிடத்து ஈடுபாடு கொண்டிருப்பதால், இவர்களுக்கும் இறைவன் வசப்படுவான்.

4. அடியார்கள் அனன்னிய (வேறாகாத) பக்தியோடு, முறை தவறாமல் இறைவனை வழிபடுவதாலேயே பயன் எய்த முடியுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, வீண் ஆடம்பர வேடங்களாலும், சாங்கியச் சடங்குகளாலும் இறைவனை அடைய முடியாது. - சாத்தூர் கும்பாபிஷேக மலர்.

5. பாடல்கள், மலரவன் செய்யும் உடல்கள் போல், பொருள்கள் போல் அழிந்துபடுவன அல்ல என்றும் நிலைத்து நிற்பன அதனால்தான் பாட்டால் அருச்சனை செய்து வணங்கிய அருளாளர்களை (திருமுறை ஆசிரியர்களை)ப் பதின்மூன்று நூற்றாண்டுகுள் கழித்தும் போற்றிப் பரவுகிறோம். காலங் கடந்தும் வாழ்வன அவ்வருச்சனை மலர்கள். எனவேதான் இறைவனை வழிபடும் அருச்சனை முறைகளில் தலையாயது, அவனைப் புகழ்ந்து பாடுவதேயாகும் என்பதைச் சேக்கிழார் பெருமான் வலியுறுத்துகிறார். - டாக்டர் த.கோ.பரமசிவம்.

6. கல்வியினாலும், வீரத்தினாலும், பொருளாலும், உயர்குடிப் பிறப்பாலும், வலிமையாலும், மானத்தாலும் ஒரு பொழுதும் செருக்கு அடையலாகாது. கல்வியின் பயன் அறிவும், பணிவுமாம், செல்வத்தின் பயன் பெரியோரைக் காத்தல் உயர்குடிப் பிறப்பின் பயன் சமமும், நேர்மையுமாம். - சுக்கிரநீதி.

7. சிவனை வழிபட்டால் யாவற்றையும் வழிபட்டதாகும். சிவனை நினைத்தால் எல்லாவற்றையும் நினைத்ததாகும். சிவாலயங்களைப் பார்த்தால் எல்லாவற்றையும் பார்த்ததாகும்.

**சைவசமயிகள் சமய தெய்வீக சொற்மொழிவாளர்கள் தெரிந்து ஒழுகுக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைச் சுவாமிகள்



குடைச்சுவாமிகள் சமாதி அடைய முன் மகாதேவ ஆச்சிரமத்தில் வடிவேல் சுவாமிகளுடன் பல கதைகளும் கதைத்துவிட்டு அவரைக் கூட்டிவந்த உரும்பிராய் கந்தையா பத்தர் அவரின் காரில் ஏறும் போது இன்னும் 6 மணித்தியாலங்கள் உள்ளது. கோண்டாவிலுக்கு கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார். அவர் கோண்டாவிலை அடைந்து சிறிது நேரத்தில் அதாவது 6வது மணித்தியாத்தில் சிவபதம் அடைந்துள்ளார். அவரது சமாதிக் கோயில் அவரது சீடர்களில் ஒருவரான சரவணமுத்து அவர்களின் நெறிப்படுத்தலில் வடிவேல் சுவாமிகள், கணேசானந்த சுவாமிகள் ஆகியோரின் அனுசரணையுடன் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டின் நிறைவில் ஓதத்தக்க சாந்திப் பாடல்கள்

உலகெலாம் அன்புமேவி ஒருகுலமாக வாழ்க
கலகமும் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
நலமெலாம் விளைய ஞானஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்தஜோதி இறைவனே போற்றி போற்றி.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளம் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

ஆறிருதடந் தோள்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க ஆனைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியா ரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக சொற்பொழிவு நிகழ்வுகள் துர்முகி வருடம் - 2016









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சத்தியா பிறிண்டேர்ஸ், யாழ். 0771386661